தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப்பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. மானியக் கோரிக்கைகள், 1989–90, விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி.

கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத் துறை

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் 4,35,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். ''

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குடியிருப்புப் பகுதி களில் கள்ளச் சாராயம் விற்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய தேவை குறித்து விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 4,35,22,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மதுவிலக்கை முழுமையாக அமல்படுத்தும் பொருட்டு மதுக்கடைகளையும் ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர் மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 4,35,22,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத்தீர்வைத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,35,22,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''